## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள்!

# மாவட்டந்தோறும் எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

### டாக்டர் சுபேர்கான் தலைமையில் நடைபெற்ற கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!



சென்னை, பிப். 21 -

"சிறுபான்மையினரின் பாதுகாவலர் முதலமைச்சர் கழகத் தலைவர் பிறந்த நாளை மாவட்டந்தோறும் எழுச்சியோடு கொண்டாடுவோம் என்று தி.மு.க சிறுபான்மை யினர் நல உரிமைப் பிரிவு மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்ப ட்டது.

தி.மு.க சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர் கான் எம்.எஸ் தலைமையில் நடைபெற்றது.

இதில், மாநில துணைத் தலைவர் ஜோசப் ராஜ் முன்னிலை வகித்தார். இந்நிகழ்வில், மாநில துணைச் செயலாளர்கள் அடையாறு சபீல் கான் வரவேற்புரையாற்ற, மாநில துணைச் செயலாளர்கள் இரா. அன்வர்கான், நூருல்லா, முனவர்ஜான், விஜயகுமார், கா.ரபி அகமது, மு.சாகுல் அமீது மற்றும் அன்வர் அலி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மேலும், மாநிலம் முழுவதும் இருந்து மாவட்ட, மாநகர தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் பங்கேற்று சிறப்பித்தனர்.

இக்கூட்டத்தில் முதலாவதாக, இந்தியாவின் மிகச்சிறந்த பொருளாதார நிபுணர் மேனாள் ரிசர்வ் வங்கியின் கவர்னர் ஒன்றிய நிதியமைச்சர் மற்றும் பிரதமர் உள்ளிட்ட பல்வேறு பதவிகளில் திறம்பட செயலாற்றியவரும், ஆட்சியில் இருந்த பத்தாண்டுகளில் தமிழ்நாட்டுக்கு எண்ணிலடங்கா சிறப்பு திட்டங்களை தந்து இந்திய பொருளாதாரத்தை உயர்த்திய முன்னாள் பிரதமர் டாக்டர். மன்மோகன் சிங் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்ப ட்டது.

தொடர்ந்து, சிறுபான்மையின மக்களின் உரிமைகளைக் காத்து, நாளும் பொழுதும் மக்கள் நலத்திட்டங்களால் நல்லாட்சி புரிந்திடும் ஒப்பற்ற தலைவர்; இந்திய திருநாட்டின் நம்பர் 1 முதல்வர்; சிறு பான்மையின மக்களின் பாதுகாவலர், முதலமைச்சர்; கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவினை அனைத்து கழக மாவட்டங்களிலும் ஏழை எளிய மாணவர்களும், பொதுமக்களும் பயன்பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கி மிகுந்த எழுச்சியுடன் கொண்டாடுவதுடன், கழகத் தலைவர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு நிகழ்த்தியுள்ள நான்காண்டு சாதனைகளை மக்களிடம் கொண்டு செல்லும் வகையில் பிறந்தநாள் விழாவினைக் கொண்டாடிட தீர்மானம் நிறைவேற்றப்ப ட்டது.

தொடர்ந்து, இந்திய நாட்டுக்கு மட்டுமல்ல, உலகத்துக்கே தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் இரும்பின் காலம் தொடங்கியது என்று, தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் மூலம் இரும்பின் காலம் 5300 ஆண்டுக்கு முன் என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க செய்தியை உலகிற்கு பறைசாற்றிய முதல்வர் அவர்களுக்கும், ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் வரலாற்று வெற்றியை வழங்கிய மக்களுக்கும், இந்த ஆண்டின் இறுதிக்குள் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள ஏழை எளிய மக்கள் ஆறு இலட்சம் பேருக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டுள்ள 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற இலட்சிய நோக்கின் வித்தகர்; திராவிட மாடல் அரசின் முதல்வர் அவர்களுக்கு ஆறு இலட்சம் குடும்பங்களின் சார்பாக இக்கூட்டத்தின் வாயிலாக நன்றி தெரிவித்தல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறை வேற்றப் பட்டன.

மேலும், மக்கள் இருக்குமிடம் தேடி மருத்துவத்தை வழங்கிடும் மகத்தான திட்டமாம் "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டம் இரண்டு கோடிக்கும் மேலான பயனாளர்களை கண்டு சரித்திர சாதனை படைத்ததோடு; அதன் தொடர்ச்சியாக, குறைந்த விலையில் பொது மக்கள் பயனடையும் வகையில் சென்னை உட்பட தமிழ்நாடு முழுதும் 1000 இடங்களில் "முதல்வர் மருந்தகம்" முதல்வர் அவர்களின் பொற்கரங்களால் துவக்கம் காண இருப்பதற்கு திராவிட மாடல் அரசிற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக சிறப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.இதனைத் தொடர்ந்து ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து கீழ்காணும் கண்டன தீர்மானங்கள் நிறை வேற்றப்ப ட்டன.

சிறுபான்மையினரின் நலனை நேரிடையாக பாதிக்கும் ஒன்றிய பாஜக அரசின் வக்பு சட்டத் திருத்த மசோதா குறித்து ஆராய தி.மு.க உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கி அமைக்கப்பட்ட கூட்டுக்குழு வின் பரிந்துரைகளை ஏற்காமல், கூட்டுக்குழுவின் தலைவரான பா.ஜ.கவின் எம்.பி., ஜெகதாம்பிகா பால் அவர்களின் தன்னிச்சையான முடிவுகளின் அடிப்படையில் நாடாளுமன்றத்தில் வக்பு சட்ட திருத்த மசோதாவை தாக்கல் செய்திருக்கும் ஒன்றிய பாசிச மோடி அரசுக்கு இக்கூட்டத்தின் வாயிலாக கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

அரசுப் பள்ளிகளில் மும்மொழிகள் கற்பிக்கப்படுவதைக் கட்டாயமாக்கும் தேசியக் கல்விக் கொள்கையான மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டு செயல்படுத்தினால் மட்டும்தான் தமிழ்நாட்டுக்கு நிதி வழங்கப்படும் என்று ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறியிருப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. பொதுப்பட்டியலில் உள்ள கல்வியில் மாநில அரசுகள் தனிக்கொள்கையை கடைபிடிக்க வகை செய்யப்பட்டுள்ள நிலையில், அதற்கு மாறாக தேசியக் கல்விக் கொள்கையைத் திணிப்பதை ஒன்றிய அரசு உடனடியாக கைவிட வேண்டும்.

புதிய கல்விக் கொள்கையின் ஓர் அங்கமான பி.எம்ஸ்ரீ பள்ளிகளை தமிழக அரசு திறக்க வேண்டும், அவற்றில் மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையை ஏற்க தமிழக அரசு மறுத்து விட்டதால், ஒருங்கிணைந்தக் கல்வித் திட்டத்தின்படி தமிழகத்திற்கு வழங்க வேண்டிய ரூ.2,401 கோடி நிதியை வழங்காமல் பல மாதங்களாக ஒன்றிய அரசு தாமதப் படுத்தி வருகிறது. இந்த நிதியை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று தமிழக அரசும், பள்ளிக்கல்வித் துறை அமைச்சரும் பல மாதங்களாக வலியுறுத்தி வருகின்றனர். எனினும் புதியக் கல்விக் கொள்கையை நிதி வழங்கப்படும் என்ற ஒன்றிய அமைச்சரின் ஆணவக்கருத்து மீண்டும் ஒரு மொழிப்போருக்கு வழிவகுக்கும் விதமாக உள்ளது.

கழகத் தலைவர்; இளம் தலைவர் வழிநின்று "வெல்வோம் இருநூறு! படைப்போம் வரலாறு!" என்ற வெற்றி முழக்கத்துடன் இறுதியாக அணியின் துணைச் செயலாளர் என்.பி.எம்.சேக் அப்துல்லா நன்றி கூறினார்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தல் படி சேலம் கிழக்கு மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியம் அரசு மாதிரி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வரும் மாணவர் அபிஷேக் இவர் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழியைச் சந்தித்து, பேட்டரி மூலம் சைக்கிள் இயக்கப்படுவதை செயல்முறை விளக்கம் செய்து காண்பித்து பாராட்டை பெற்றார். இதனையடுத்து மாவட்ட பொருளாளர் ஆர்.வி. ஸ்ரீராம் பள்ளிக்குச் சென்று மாணவன் அபிஷேக்கை சந்தித்து பாராட்டினார். மேலும் மாணவனை ஊக்குவிக்கும் வகையில் அவருக்கு மடிக்கணினி வழங்கினார். அதனை தொடர்ந்து கல்விச் செலவுக்கு தன்னை அணுகலாம் என்றும் மாணவரிடம் கூறினார். அப்போது பள்ளி தலைமை ஆசிரியர் , ஆசிரியர்கள், மற்றும் திமுக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திண்டிவனம் கோ.வெங்கட்ராமன்

### பிப்ரவரி 21 (2013)



**1974ஆம் ஆண்டு முதல் கழக வழக்கறிஞராக பணியாற்றி வந்தார்.**

**1989–ல் மாநிலங்களவை உறுப்பினராகவும் – 1996–ல் திண்டிவனம் மக்களவை தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, மத்திய அமைச்சராகப் பணியாற்றினார்.**

**பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த இவர் கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**இந்தி எதிர்ப்பு போராட்டம், சட்ட எரிப்பு போராட்டம் போன்ற போராட்டங்களில் பங்கேற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



முன்னாள் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் கே.பி.கே. தங்கவேல் அவர்களின் 8ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது படத்திற்கு புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி மலர் தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் ஞான.இளங்கோவன், கே.பி.கே.டி.தங்கமணி, தவ.பாஞ்சாலன், குமரேசன், பள்ளத்து விடுதி நாராயணன், ரத்தினவேல், எம்.ஜி (எ) ராமச்சந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்த

# 'கலைஞர் மகளிர் உரிமைத்தொகை' மூலம் கிராமப்புற பொருளாதாரம் உயர்ந்துள்ளது!

### அறந்தாங்கியில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேச்சு!



புதுக்கோட்டை, பிப். - 21-

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி பேரூராட்சி, அறந்தாங்கி மற்றும் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 18.02.2025 அன்று பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப்பணி களுக்கு அடிக்கல் நாட்டினார்.

பின்னர், பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தெரிவித்ததாவது;

இப்பகுதிக்கு பல்வேறு வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் புதிதாக தார் சாலை வசதி ஏற்படுத்தப்படும். இந்த ஊராட்சியின் குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்காக ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டு இருக்கிறது மூன்று மாதத்திற்குள் இந்த ஊராட்சி அனைத்து பதிவுகளுக்கும் குடிநீர் வினியோகம் செய்யும் வகையில் திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தெருவிளக்குகள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வைத்தனர்.

அனைத்தும் நிறைவேற்றப்படும். புயலில் பகுதியை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. 25 பேருக்கு கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் வீடுகள் கட்டித் தரப்படும். நாட்டு நடப்பை நீங்கள் கைபேசி வாயிலாக தெரிந்து கொண்டிருப்பீர்கள் 100 நாள் வேலை திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு ரூ.2300கோடி 100 நாள் வேலை திட்டத்தில் நிதி வழங்காமல் இருக்கிறார்கள்.

செல்லும் இடங்களில் எல்லாம் எங்களுக்கு சம்பளம் வரவில்லை என பொதுமக்கள் கூறுவதை கேட்கும் போது வேதனையாக இருக்கிறது. இதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது அவர்களுக்கான நிதியை உடனடியாக வழங்க வேண்டும் என முதலமைச்சர் அவர்கள் பிரதமருக்கு கடிதம் எழுதி இருக்கிறார்கள்.

40 லட்சம் பிள்ளைகளின் கல்விக்காக 2152 கோடி ரூபாய் புதிய கல்வித் திட்டத்தில் சேர்ந்தால் தான் அந்த நிதியை ஒதுக்க முடியும் என ஒன்றிய அமைச்சர் கூறுகிறார். 40 லட்சம் பிள்ளைகளின் கல்வியை பற்றி கவலைப் படாமல் அவருடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்காக இப்படி செய்கிறார்கள். அறிஞர் அண்ணா அவர்களின் இருமொழிக் கொள்கை தான் இத்தனை ஆண்டுகளாக தமிழ்நாட்டை வளர்ச்சி அடைய செய்துள்ளது.

இப்படிப்பட்ட சூழ்நிலையிலே கல்விக்காக அதிக நிதியை முதல மைச்சர்கள் ஒதுக்கி திட்டங்களை செயல்படுத்தியுள்ளார்கள். கலைஞர் மகளிர் உரிமைத்தொகை 1கோடியே 14லட்சம் பெண்களுக்கு வழங்கப் பட்டுள்ளது. இதன் மூலம் கிராமப்புற பொருளாதாரம் உயர்ந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு என்றென்றும் நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்.

**கிராமப்புற மக்களுக்காக அடிப்படை வசதிகள்!**

மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிராமப்புறங்களில் வாழும் பொதுமக்களின் வளர்ச்சியினை கருத்தில் கொண்டு பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் கிராமப்புறங்களின் அடிப்படைத் தேவைகளான, குடிநீர் வசதி, சுகாதார வசதி, சாலை வசதி, மின் வசதி உள்ளிட்டவைகளை மேம்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் ஆலங்குடி பேரு ராட்சி, அறந்தாங்கி மற்றும் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, புதியதிட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது எனஅமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார், கே.பி.கே.டி.தங்கமணி, ஆர்.வி. செல்வம், மகேஷ்வரி சண்முகநாதன், உஷா செல்வம், கருப்பையா, ஆர்.கருப்பையா, மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், திருமுருகன்பூண்டி ஒன்றியம், தெக்கலூர் ஊராட்சியில் ரூ47.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கிராம சந்தையை திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் தலைமையில், ஒன்றிய கழக செயலாளர் எஸ்.ஆர். பழனிச்சாமி முன்னிலையில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கழக துணை பொதுச் செயலாளர், நீலகிரி பாராளுமன்ற உறுப்பினர், முன்னாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா திறந்து வைத்தார். இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் எஸ்.சரவணன் நம்பி, வேலம்பாளையம் பகுதி செயலாளர் கொ.இராமதாஸ், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எல் ஐ சி அவினாசியப்பன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பெரியார் காலனி எம்.எஸ் மணி, கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் சிடிசி ரமேஷ், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் ஆர்.டி.என்.விவேக், அவினாசி சட்டமன்ற தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி முன்னாள் ஒருங்கிணைப்பாளர் சந்தோஷ், மாவட்ட இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர் சு.செல்வரங்கம் உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# நீலகிரி மாவட்டம், கூடலூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க.,தோழமைக் கட்சி நிர்வாகிகள் கூட்டம்!



நீலகிரி, பிப்.21-

நீலகிரி மாவட்டம், கூடலூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க.,தோழமைக் கட்சி நிர்வாகிகள் கூட்டம் உதகை ஜெம் பார்க் ஓட்டல் கூட்ட அரங்கில் மாவட்ட திமுக பொறுப்பாளர் கே.எம். ராஜூ தலைமையில், தமிழ்நாடு அரசின் தலைமை அரசு கொறடா கா.ராமச்சந்திரன், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் தி.மு.க., துணை பொதுச்செயலாளர் - நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

முன்னதாக சி.பி.எம் மூத்த தலைவர் வாசு, அகில இந்திய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் கோசிபேபி, சி.பி.ஐ முகமது கனி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சகாதேவன், மாவட்ட செயலாளர் துரை புவனேஸ்வரன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்டசெயலாளர் அனீபா ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

கூட்டத்தில் கூடலூர் தொகுதியில் கடந்த 50 ஆண்டுகளாக நிலுவையிலுள்ள ஜென்மம் நிலம் பிரிவு17 நிலப்பிரச்சினைக்கு தீர்வு காண கடந்த 30.1.2025 அன்று தலைமை செயலகத்தில் அரசு அதிகாரிகளை அழைத்து ஆலோசனை மேற்கொண்ட கழக தலைவர் தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியும் வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது. மேலும், இதற்கு உறுதுணையாக இருந்து செயல்பட்ட கழக துணைபொதுச்செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசாவுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் திமுக சார்பில் மாவட்ட அவை தலைவர் போஜன், துணை செயலாளர்கள் லட்சுமி,ரவிகுமார், பொருளாளர் நாசர் அலி, தலைமைசெயற்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், திராவிடமணி, காசிலிங்கம்,செந்தில் ரங்கராஜ், மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் பரமேஸ்குமார், நகர செயலாளர்கள் ஜார்ஜ், இளஞ்செழியன், சேகரன், ஒன்றிய செயலாளர்கள் லியாகத்அலி, சிவானந்தராஜா, சுஜேஷ், ஓவேலி பேரூர் செயலாளர் சின்னவர், பொதுக் குழு உறுப்பினர் காளிதாசன், சதக்கத்துல்லா, அமிர்தலிங்கம், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ராஜேந்திரன், மாவட்ட அமைப்பாளர்கள் சசிகுமார், எல்கில் ரவி, காங்கிரஸ் கட்சி சார்பில் கோபிநாதன், அசரப், சிவராஜ், சாஜி, அசைனார், இபுனு, யாசீன், தாஹீர், குட்டன்,ஜெய்சன், முஸ்லிம் லீக் சார்பில் ஆலி உப்பட்டி, விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் ராஜேந்திரபிரபு, துயில மேகம், மகேசன், அசரப் உட்பட ஏராளமானவர்கள் கலந்துக் கொண்டனர்.

முடிவில் மாவட்ட துணை செயலாளர் ரவிகுமார் நன்றி கூறினார்.